Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 13 (28-12-1992) திங்கட்கிழமை ஓசை 314

## 55,000 மாணவர்கள் உயர்தரப்பரீட்சையில் சித்தி

கடந்த ஆகஸ்டில் நடைபெற்ற க. பொ. த. (உயர்தர) பரீட்சை முடிவுகள் இன்று கொழும்பில் வெளியிடப்படும் என பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார். முடிவுகள் குறித்து பரீட்சை ஆணையாளர் கருத்துவெளியிடுகையில் சென்ற வருடத்தை விட இவ்வருடம் சித்தியடைந்தோர் தொகை 6 சத வீதம் அதிகரித்துள்ளது எனவும் 94 பரீட்சார்த்திகள் நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்தி (4A) பெற்றுள்ளார்கள் எனவும் தெரிவிக்கின்றார் இந்த வருடம் ஒரு இலட்சத்து முப்பதினாயிரம் பேர் தோற்றினார்கள். இவர்களில் ஐம்பத்திநான்காயிரத்து தொழாயிரத்து முப்பத்தேழு பேர் பல்கலைக்கழ (4 ஆம் பக்கம் பார்க்க)

# தலைவர் பிரபாவின் அறிவிப்பை அரசு கருத்தில் கொள்ள வேண்டும்

## அதிமேற்றாணியார் கோரிக்கை

(கொழும்பு)

"சமாதானக் கதவுகள் என்றும் திறந்திருக்கும் என்று விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரன் தெரிவித்துள்ளமையை அரசாங்கம் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும், மக்களும் இதனையே எதிர்பார்க்கின்றார்கள்" இவ்வாறு இலங்கையின் அதிமேற்றாணியார் அதி. வண. நிக்கிலஸ் மாக்கஸ் பெர்னான்டோ வேண்டுகோள் விடுத்தார்.

நத்தார் விசேட செய்தியில் அதிமேற்றாணியார் மேலும் தெரிவித்துள்ளதாவது இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் சமாதானத்தை உருவாக்கும் பொருட்டு சகல தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

மேலும் அவர் அபிவிருத்திக்கு சமாதானம் முக்கியமானதெனவும் தெரிவித்தார்.

இதேவேளை இனப்பிரச்சினை தீர்விற்கு யுத்தநிறுத்தத்துடன் கூடிய பேச்சுவார்த்தைக்கு விடுதலைப்புலிகள் தயார் எனவும், சமாதானக் கதவுகள் திறந்தே இருக்கின்றன என கூறியிருப்பதும் தெரிந்ததே.

## கூடுதல் தளபாட கொள்வனவு ராணுவத்தினர் வற்புறுத்து

### ஆளணிகளும் அதிகரிக்க வேண்டுமாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போராட மேலும் போர்த்தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும் எனவும், படையணிகளைப் பெருக்க வேண்டும் எனவும் இராணுவத்தின் ஒரு பகுதியினர் வற்புறுத்தி வருவதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'திவயின' சிங்கள நாளிதழ் தெரிவிக்கின் உடன்பாடான கருத்தையே இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னாவும் கொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை கூட்டுப்படை தலைமைத் தளகர்த்தா லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா ஏற்கனவே உள்ள வளங்கள் இராணுவத்தினருக்குப் போதும் என்ற கருத்தைக் கொண்டுள்ளதாகவும் கூடிய இராணுவ அதிகாரிகள் இல்லை. இராணுவத் தளபதி ஒருவர் அவருக்கும் மேல் அதிகாரம் உடைய ஒருவர் என்பதனால் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவதிலேயே காலம் போகிறது. இதனால் நடவடிக்கைகள் குழப்பம் அடைந்துள்ளன.

அதிகமான படையினர், போராயுதங்கள் இன்றி யுத்தத்தை தொடர முடியாது

## ஒட்டமாவடி உ. அ. அதிபரும் கண்ணிவெடியில் மரணம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனைக்கு அப்பால் மியான்குளம் அருகே நடந்த கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், மற்றும் ஒட்டமாவடி உதவி அரசாங்க அதிபர் ஆகியோரும் இடம்பெற்றுள்ளார்கள்.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் அகமது லெப்பை, ஒட்டமாவடி உதவி அரசாங்க அதிபர் உதுமா லெப்பை உட்பட அறுவர் மகாவலி திட்டத்தின் கீழ் வரும் பி வலயப் பகுதியை பார்வையிடச் சென்றுகொண்டிருந்த போதே தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அப்போது அவர்கள் அனைவரும் உயிரிழந்ததாகவும் கூறப்படுகிறது.

## ராணுவக் கட்டுப்பாடில்லா பிரதேசங்களில் அகதிமுகாம்

(கொழும்பு)

வவுனியா, மன்னார், திருக்கோணமலை மாவட்டங்களில் இருக்கும் பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத பிரதேசங்களிலும் தமிழ்நாட்டிலிருந்து திரும்பி வரும் அகதிகள் குடியமர்வதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றும் இதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி அளித்துள்ளது என்றும் புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சு கூறியுள்ளது.

## கொழும்பு புறநகர்ப்பகுதியில் வாகனங்கள் கடத்தல்

(கொழும்பு)

கொழும்பு புறநகர்ப் பகுதியான பெகிலியகொடவில் தனியார் வாகனங்கள் மர்மமான முறையில் கடத்தப்படுவது தொடர்பாக அப்பகுதியில் பதற்றம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு வாரங்களுக்கு முன் ஒரு லான்சர் கார் கடத்தப்பட்டுப் பின்னர் அனாதரவாகக் காணப்பட்டது. அதற்கு முன் டெலிக்கா வான் ஒன்று கடத்தப்பட்டு பெகிலியகொட நகரில் சாரதியுடன் அனாதரவாக விட்டிருக்கக் காணப்பட்டது. இதனால் அப்பகுதியில் வாகன உரிமையாளர் இரவு வேளைகளில் வாகனங்களை வாடகைக்கு விடுவதை நிறுத்தியுள்ளனர்.

## சம்பள உயர்வு போதாது உபவேந்தர்கள் கடிதம்

(கொழும்பு)

பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கு வழங்கிய சம்பள உயர்வு வாழ்க்கைச் செலவிற்கு ஏற்றதாக அமையவில்லை என்று பல்கலைக்கழக உபவேந்தர்கள் சென்றவெள்ளியன்று ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பள உயர்வை ஜனாதிபதி மீள் பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு இக்கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## "தங்கச் சுரங்கம்"

## மதுபான விற்பனை அனுமதிச்சான்றிதழ் பெறுக

யாழ். குடாநாட்டில் மதுபானவிற்பனையில் ஈடுபட்டுள்ள அனைவரும் 1993 - ம் ஆண்டிற்கான மதுபான விற்பனை அனுமதிச் சான்றிதழை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையில் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அனுமதிச்சான்றிதழுக்கான விண்ணப்பங்கள் 29-12-1992 தொடக்கம் 05 - 01 - 1993 வரை யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் அமைந்துள்ள வருவாய்பகுதிச் செயலகத்தில் காலை 10. 00 மணி முதல் மாலை 4. 00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் அனுமதிப்பத்திரமின்றி மதுபானவிற்பனையில் ஈடுபடுவதற்கு இசைவளிக்கப்படமாட்டாது எனவும், இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிதித்துறை விடுத்த பத்திரிகைக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## புலிகளின் அனுமதியின்றி செல்ல விரும்பவில்லை

### மன்னார் அகதி தெரிவிப்பு

(புத்தளம்)

விடுதலைப் புலிகளின் அனுமதியின்றி தாங்கள் மன்னாருக்குச் செல்ல விரும்பவில்லை என புத்தளம் முகாமிலுள்ள முஸ்லிம் அகதி ஒருவர் தெரிவித்துள்ளார் மன்னாரில் போதிய பாதுகாப்பு வழங்குவோம் எனவும் இங்கிருந்து புறப்பட்டு மன்னாருக்குச் செல்லும்படியும் வற்புறுத்துகிறார்கள். ஆனால் அதனை நம்பி நாம் போகத்தயாராயில்லை புலிகளின் அனுமதியின்றி மன்னாருக்குசெல்லவிரும்பவில்லை என்றும் தெரிவித்தார்.

## புதிய ரக விமானம் வலிமேற்கில் நோட்டம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான புதிய ரக விமானமொன்று நேற்றுக் காலை வலி மேற்குப் பகுதி புரம் ஆகிய பகுதிகளை இப் புதிய ரக விமானம் நோட்டமிட்டுச் சென்றுள்ளதாக நேரில் கண்ட அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். மேலும்

மான முறையில் கடத்தப்படுவது தொடர்பாக அப்பகுதியில் பதற்றம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு வாரங்களுக்கு முன் ஒரு லான்சர் கார் கடத்தப்பட்டுப் பின்னர் அனாதரவாக விட்டிருக்கக் காணப்பட்டது. இதனால் அப்பகுதியில் வாகன உரிமையாளர் இரவு வேளைகளில் வாகனங்களை வாடகைக்கு விடுவதை நிறுத்தியுள்ளனர்.

## சம்பள உயர்வு போதாது உபவேந்தர்கள் கடிதம்

(கொழும்பு)

பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கு வழங்கிய சம்பள உயர்வு வாழ்க்கைச் செலவிற்கு ஏற்றதாக அமையவில்லை என்று பல்கலைக்கழக உபவேந்தர்கள் சென்றவெள்ளியன்று ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பள உயர்வை ஜனாதிபதி மீள் பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு இக்கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## "தங்கச் சுரங்கம்" ராணுவ நடவடிக்கையாம்

சிறிலங்கா ராணுவம் வட மாகாணத்தில் கோல்ட் மயின் (தங்கச்சுரங்கம்) என்ற ராணுவ நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

## தமிழ் இளைஞர் கைது தென்பகுதியில் தொடர்கிறது

(கண்டி)

கண்டி மாவட்டத்தில் பொலிஸாரின் திடீர் சுற்றிவளைப்பின்போது வட பகுதியைச் சேர்ந்த பத்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் விடுதலைப் புலி

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## பாதுகாப்பு நிதிக்கு 28 கோடி ரூபா

சிறிலங்காவின் தேசிய பாதுகாப்பு நிதிக்கு 28 கோடியே 60 லட்சம் ரூபா கிடைக்கப் பெற்றதாக தேசிய பாதுகாப்பு நிதியின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்த நிதி திறைசேரி உண்டியல் தேசிய சேமிப்பு வங்கி, அரசாங்கவர்த்தகவங்கிகளின் நிலையான வைப்புகளில் இடப்பட்டிருப்பதாகவும், இதற்கு மாதாந்தம் ஆறு கோடி ரூபா வருமானமாக கிடைப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த நிதியை கொண்டு பாதிக்கப்பட்ட இராணுவத்தினருக்கு செயற்கை உறுப்புக்களை பொருத்துதல், காயப்பட்டவர்களை மருத்துவ சேவைக்காக வெளிநாடு அனுப்புதல், எக்ஸ்ரே கதிர்வீச்சு பெறுதல் போன்ற நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## புலிகளை இராணுவரீதியாக வெற்றிகொள்ள வேண்டும்

### ஈ. பி. டி. பி. யின் விருப்பம் அதுவாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் ஜனநாயக வழிக்கு வரவேண்டும் அல்லது விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக வெற்றிகொள்ளவேண்டும். இதில் இரண்டாவது வழியையே ஈ. பி. டி. பி. நாடி நிற்பதாக அக்கட்சியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ் அறிக்கையில் மேலும் யுத்தம் தொடங்கியது முதலே சமாதான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டே வருகிறது. ஆனால் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டோர் சிலர், போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு பொது நோக்கத்துடன் செயற்படாமல் புலிகள் பக்கம் சார்பான நோக்கில் செயற்படுவது கசப்பான அனுபவம் ஆகும் என்றும் கூறப்பட்டுள்ளது.

# கூடுதல் தளபாட கொள்வனவு ராணுவத்தினர் வற்புறுத்து

## ஆளணிகளும் அதிகரிக்க வேண்டுமாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போராட மேலும் போர்த்தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும் எனவும், படையணிகளைப் பெருக்க வேண்டும் எனவும் இராணுவத்தின் ஒரு பகுதியினர் வற்புறுத்தி வருவதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'திவயின' சிங்கள நாளிதழ் தெரிவிக்கின்றது.

வடக்கு, கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுவதற்கு, மேலதிக போர்த் தளபாடங்களும், 15,000 ற்கு மேற்பட்ட இராணுவத்தினரும் தேவை யெனவும் இராணுவ தரப்பில் கோரப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது. இதற்கு உடன்பாடான கருத்தையே இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னாவும் கொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை கூட்டுப்படை தலைமைத் தளகர்த்தா லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா ஏற்கனவே உள்ள வளங்கள் இராணுவத்தினருக்குப் போதும் என்ற கருத்தைக் கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

மேலும் புதிய தலைமையின் கீழ் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய இராணுவத்தினரிடையே மனத்தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

அரசியல் தலைமையோ இராணுவத் தலைமையோ இன்றி இராணுவம் குழப்பமடைந்துள்ளது. இன்று செயற்படக்கூடிய இராணுவ அதிகாரிகள் இல்லை. இராணுவத் தளபதி ஒருவர் அவருக்கும்மேல் அதிகாரம் உடைய ஒருவர் என்பதனால் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவதிலேயே காலம் போகிறது. இதனால் நடவடிக்கைகள் குழப்பம் அடைந்துள்ளன.

அதிகமான படையினர், போராயுதங்கள் இன்றி யுத்தத்தை தொடர முடியாது என்கின்றனர் சிலர்.

கூட்டுப்படைத் தலைவர்கள் ஏற்கனவே உள்ள வளங்களைக் கொண்டு யுத்தத்தை நடத்தலாம் என்கின்றார்கள்.

15,000 படையினர் புதிய அணிகள் எல்லாம் தேவையென இராணுவத் தளபதி கேட்கிறார். இதற்கு கூட்டுப்படையினர் மறுப்பு தெரிவித்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# மாத்தளை பகுதி காடுகளில் புலிகளின் பயிற்சி முகாம்

## பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிப்பு

மாத்தளை தோட்டப்பகுதிகளிலுள்ள காடுகளில் பயிற்சி முகாம் அமைக்கச் சாதகமான பகுதிகளை விடுதலைப் புலிகள் தேடிவருவதாக தமக்கு தகவல்கிடைத்துள்ளதென சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் ஆதராவாளர்கள் பல தோட்டங்களை பரிசீலனை செய்துள்ளதாகவும் யடவத்த, அலுத்வத்த, பிடகந்த, கொனேபொக்க, மடுள்களே, ஆகிய தோட்டங்களிலேயே மேற்படி ரகசிய நடவடிக்கைகள் இடம்பெற்றதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிக்கின்றன.

இவ் இடங்கள் அண்மையில் சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்ட 27 பேரின் வாக்குமூலத்தில் இருந்து தெரியவந்ததாகவும் இதனால் மாத்தளை மாவட்டத்திற்கு வரும் சகல பாதைகளும் தடைகள் போடப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும், காரணம் இன்றி வெளியார் தங்க அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

மாத்தளையில் உள்ள சகல பொலிசாரும் உசார் படுத்தப்பட்டுள்ளதாகவும் இன்னும் தொடர்ந்து தேடுதல்வேட்டை நடக்கும் என்றும் தேவை ஏற்பட்டால் கொழும்பில் இருந்து விஷேட பொலிஸ்பிரிவு வரவழைக்கப்படுவார்கள் என்றும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# அகதிகள் நிவாரணம்போதாது செஞ்சிலுவை தெரிவிப்பு

(கொழும்பு)

அகதி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு அரசாங்கம் வழங்கும் நிவாரணம் அவர்களுக்கு கொஞ்சம் கூடப் போதாது. இந்நிலையில் நிவாரணத்தை நிறுத்தினால் அவர்கள் வீடுகளுக்கு திரும்பி விடுவார்கள் என அரசாங்கம் தெரிவிக்கிறது. அரசின் இக்கூற்று கண்டனத்திற்குரியது. இவ்வாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரியொருவர் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

இன்று 5 இலட்சத்து 50 ஆயிரம் பேர் அகதியாகியுள்ளனர். இவர்கள் வீடுகளில் இருக்கமுடியாத நிலையிலேயே அகதிமுகாம்களில் தங்கியுள்ளார்கள் என்பதை எம்மால் உறுதிப்படுத்த முடியும் என அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# செல்ல விரும்பவில்லை

## மன்னார் அகதி தெரிவிப்பு

(புத்தளம்)

விடுதலைப் புலிகளின் அனுமதியின்றி தாங்கள் மன்னாருக்குச் செல்ல விரும்பவில்லை என புத்தளம் முகாமிலுள்ள முஸ்லிம்அகதி ஒருவர்தெரிவித்துள்ளார். மன்னாரில் போதிய பாதுகாப்பு வழங்குவோம் எனவும் இங்கிருந்து புறப்பட்டு மன்னாருக்குச் செல்லும்படியும் வற்புறுத்துகிறார்கள். ஆனால் அதனை நம்பி நாம் போகத்தயாராயில்லை புலிகளின் அனுமதியின்றிமன்னாருக்குசெல்லவிரும்பவில்லை என்றும் தெரிவித்தார்.

## புதிய ரக விமானம் வலிமேற்கில் நோட்டம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான புதிய ரக விமானமொன்று நேற்றுக்காலை வலி மேற்குப் பகுதிகளை மிகவும் குறைந்த வேகத்தில் தாளப் பறந்து நோட்டமிட்டுச் சென்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

நேற்றுக்காலை 9-30 மணியளவில் மாதகல், பண்டத்தரிப்பு, பொன்னாலை, சுழிபுரம் ஆகிய பகுதிகளை இப் புதிய ரக விமானம் நோட்டமிட்டுச் சென்றுள்ளதாக நேரில் கண்ட அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். மேலும் அவர்கள் தெரிவிக்கையில் இவ் விமானம் சுமார் நான்கு, ஐந்து தடவைகள் மேற்படி பகுதிகளை மிகவும் மெல்லிய சத்தத்துடன் தாளப்பறந்து நோட்டமிட்டுச் சென்றுள்ளதாகத் தெரிவித்தனர்.

## கைக்குண்டு வெடித்து ராணுவ சிப்பாய் பலி

(அம்பாறை)

அம்பாறை துரெயிவாடு பகுதியில் கைக்குண்டு வெடித்ததில் ஒரு சிப்பாய் பலியானார் எனவும், இரண்டு சிப்பாய்கள் படுகாயம் அடைந்ததாகவும், கூட்டுப்படை தலைமை அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேற்படி சம்பவம் 22-ம்திகதி இடம் பெற்றதாகவும் ரோந்தில் ஈடுபட்டிருந்த சிப்பாய் ஒருவர் கையில் வைத்திருந்த குண்டு தற்செயலாக வெடித்ததினால் ஏற்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## அகதிகள் முகாம்களில் கூட்டுறவு கிளைகள் திறப்பு

இடம் பெயர்ந்த மக்களின் இலவச உலர் உணவு விநியோகத்திற்கென தீவக கோட்ட கூட்டுறவு ஒன்றியம் தீவக மக்கள் தங்கியுள்ள முகாம்களில் கிளைகளை திறப்பதற்கு முடிவெடுத்துள்ளதாக ஒன்றியத்தின் அறிக்கை ஒன்று கூறுகின்றது. இதன்படி செற்பலி பண்டிதர்குடியிருப்பு யாழ் புகையிரத நிலையம் ஆகிய இரு முகாம்களிலும் புங்குடுதீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் தலா ஒவ்வொரு கிளைகளையும், நாவற்குளி லவனிதா குடியிருப்பு, அரியாலை சாம்சன், டயஸ், மணியரசன் ஆகிய குடியிருப்புக்களை உள்ளடக்கிய நாவலடி முகாம் இரண்டிலும் ஊர்காவற்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தலா ஒவ்வொரு கிளைகளையும் திறக்க உள்ளன. மேற்படி முகாம்களில் வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்க எல்லைப் பரப்பிலுள்ள மக்கள் மிகவும்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## முல்லைத்தீவு வங்கியின் பதிவேடுகளைகாணவில்லை

[வடமராட்சி]

கிளிநொச்சியில் மீண்டும் இயங்கி வரும் முல்லைத்தீவு இலங்கை வங்கியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் எட்டு கமநல சேவை நிலையங்களின் நிதி கணக்குகள் விபரப் பதிவேடுகள் காணாமல் போயுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்நிலையங்கள் மூலமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள், மீளப்பெற்ற கடன் விபரங்கள் அடங்கிய பதிவேடுகள் காணாமல் போயுள்ளதால் கடன் சம்பந்தமான நடவடிக்கைகள் தொடர முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு, ஒலுமடு,

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### அராலியூரரின் நூல்கள்

அராலியூர் சுந்தரம்பிள்ளையின் நாடகங்களை வாசித்தால் நீங்கள் எந்த வானொலி நிலையத்திற்கும் நாடகங்கள் எழுதலாம். 1 பொலிடோலே கதி, 2. பணமோபணம்மேடை நாடகங்கள், 3. செட்டிக்காரர்கள். 4. முதலாம்பிள்ளை 30/- வானொலி நாடகங்கள். (3751)

### பாலராசிரியர் பயிற்சி

பாலராசிரியர் பயிற்சி விரைவில் ஆரம்பமாகும். க. பொ. த. (சா/த) கடைசித் தகைமையாகும். நேரில் வந்து கற்க முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம் பாலர் ஆசிரியர் சங்கம். மே/பா: உயர் கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம். (3871)

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்களை றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றரிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. (சி-5588)

### நிர்வாகிகள் தெரிவு

நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 19 12. 92இல் நடைபெற்ற போது பின்வருவோர் புதுவருட நிர்வாக சபையினராகத் தெரிவு செய்யப்பட்டனர் தலைவர்: செ.இரவீந்திரன் உப தலைவர்: ஆ. கந்தசாமி செயலாளர்; ந இரவிச்சந்திரன உப செயலாளர்: ச. நந்தகுமார், பொருளாளர்: வி. பாலராசன், விளையாட்டுப் பொறுப்பாளர்: ந. சிவனேஸ்வரன், கலாசாரப் பொறுப்பாளர்: செ. கிருஷ்ணராசன், நூல் நிலையப்பொறுப்பாளர், இ. திலகரத்தினம், பாலர் பாடசாலைப் பொறுப்பாளர்: ச. குணபாலசிங்கம்.

---

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
## யாழ் கல்விக் கோட்டம்
## காரியாலயம் இடமாற்றம்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் யாழ் கல்விக் கோட்டக் காரியாலயம் 70A கன்னாதிட்டி வீதி எனும் புதிய இடத்தில் 28-12-1992 திங்கட்கிழமை முதல் இயங்கும் என்பதைச் சகல பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் அறியத் தருகிறேன்.

[திங்கள், புதன், வெள்ளி]

நேரம்: பிற்பகல் 3-00 தொடக்கம் 6-00 மணி வரை

தலைவர்
யாழ். கல்விக்கோட்டம்
(சி-5653)

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

| தாயின் மடியில்: | தமிழீழத் தாயின் மடியில்: |
|---|---|
| 02 | 28 |
| 06 | 12 |
| 1970 | 1989 |



### வீரவேங்கை இவான்
(லோகேஸ்வரன் மனோகரன்)

சூழும் போர்மேகம் எம் சுந்தர நிலத்தினிலே - எனினும்
தோளும் இழந்திங்கு எதிரிதாழும் நிலை கண்டு
வாழும் வயதினிலே ஊனைக் கொடுத்த இவ(ா)ன்
நாளும் சிரித்திடுவான் மனோகரமாயிங்கு மலரும் -
- பூக்களிலே

உரிமை உணர்வுகள் உரமாகிப் போனதால் - உன்
உதிரம் பெருக்கெடுக்க உயிரை விதைத்தவனே
உனை நேசித்த காரணத்தால் உள்ளங்கள் பல இங்கு
மண்ணை நேசிக்கும் மனத்தைப் பெற்றனவே

மனமெங்கும் மண்பாசம் கிளைவிட்டுப் பாய - உன்
மாறாத உறுதியுடன் செயல் ஓங்கி வாழும்
நிலம் மீட்க நெருப்பிலே நீ நீராடும் வேள்வி - ஈழ
மண் வாழும் காலம் வரை உன் புகழும் வாழும்.

இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஏனைய மாவீரர்களுக்கும் எம் கண்ணீர் அஞ்சலிகள்.

அம்மா, அப்பா, அக்கா,
நண்பர்கள், உறவினர்.

டச்சு வீதி,
வட்டு - கிழக்கு,
சித்தன்கேணி.
(3846)

---

## அமைச்சரவையில் சேரும்படி எவரும் அழைக்கவில்லை

[கொழும்பு]

அமைச்சரவையில் தான்சேர இருப்பதாக வெளிவந்த செய்திகள் வெறும் வதந்திகளே என்று முன்னாள் அமைச்சர் ரொனிடிமெல் கூறியுள்ளார். அவர் பேலும் கூறுகையில், தான்எந்தஅரசியல்கட்சியிலும் அங்கத்தவராக இல்லை எனவும் 1988 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எந்த அரசியல் கட்சிக்கும் தான் அங்கத்துவ பணம் செலுத்தவில்லை எனவும் குறிப்பிட்டார்.

---

## 90-ம் நாள் நினைவஞ்சலி
28.12.1992



### லெப். அரவிந்தன்
(பதவியா இராணுவ முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவு அடைந்தவர்)

வீரஜனனம்
14-08-1972

வீரச்சாவு
30-09-1992

''சிறுவயதினிலே சிந்தனை பெற்றவனே
சுதந்திர காற்றை சுவாசிக்க எழுந்தவனே
சென்ற பாதையில் இடர்கள் கண்டவனே
உன் இடர்களை நினைக்கையிலே
எம் உள்ளம் கொதிக்குதைய்யா''

இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது இதய அஞ்சலியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் சக போராளிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

உமது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

ஜெயந்திநகர்,
கிளிநொச்சி,
தமிழீழம்.
(சி-5634)

---

## கற்பிட்டியில் இருவர் கைது

(கொழும்பு)

கற்பிட்டியில், விடுதலைப் புலிகளுக்கு 'ஓயில்' வழங்குவதில் ஈடுபட்டதாகக் கூறி இரண்டு தமிழர்களை சிறிலங்கா கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இவர்கள் மீனவர் என்று கூறிக்கொண்டு மன்னாரில் வைத்து புலிகளுக்கு ஓயில் வழங்கினார்கள் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

### ஒளி விழா

நெல்லியடி இருதய சன சமூக நிலையத்தில் இன்று இரவு 7 30 மணிக்கு ஒளிவிழா கொண்டாடப்படவுள்ளது.

இரவு நிகழ்ச்சியாக கலை நிகழ்ச்சிகள், புரட்சிப்பாடல் நிகழ்ச்சிகள்இடம்பெறவுள்ளன

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி
## செல்வி தேவதாஸ் ஜெனா மக்டலின்

மலர்வு:
28-04-1991

உதிர்வு:
28-11-1992

முல்லைச் சிரிப்பாலே முறுவலித்தெமை
அல்லும் பகலும் நிறைவுடனே மகிழ்வூட்டி
ஏற்றம் மிக எமக்களித்து எமை ஏற்றிவைத்த ஜெனாவே,
பெற்ற மனங்கள் தவியாய் தவிக்குதையோ
எம்மை விட்டு இறைவனின் சிறிய
புஷ்பமாய் வாழச் சென்றனையோ
உன் முல்லைச் சிரிப்பாலே இறைவனை
எமக்காய் இறைஞ்சிடுவாய்

5-ம் வட்டாரம்,
மண்டைதீவு.
(5662)

பிரிவால் துயருறும்,
பெற்றோர், உற்றார், உறவினர்,
மடுக்கோவில் - மடு.

---

## நினைவு கூருகின்றோம்
### 1992-12-28

1985-ம் ஆண்டு இதே தினத்தில் இறக்கண்டிப்பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சுடப்பட்டு வீரச்சாவெய்திய-

மைக்கல் (சண்முகம் சுப்பிரமணியம் - 6-ம் கட்டை, சாம்பல்தீவு- திருக்கோணமலை)

கோணேஸ் (பொன்னுத்துரை கௌரிராமன் - பன்குளம்)

லோகன் (பொன்னுத்துரை உதயகுமார் - பன்குளம்)

1987 ஆம் ஆண்டு வற்றாப்பளையிலிருந்து, முல்லைத்தீவுநகர் நோக்கிப் பயணம் செய்த போது இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமல் போன வற்றாப்பளையைச் சேர்ந்த கணவன், மனைவி. மற்றும் 2- குழந்தைகள்.

1989ஆம் ஆண்டு முசல்குத்திப் பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய-

இவான் (லோகேஸ்வரன் மனோகரன் - பிரதானவீதி, சங்கானை- யாழ் )

தனம் (வடிவேலு சிவபாலன்- 97/2, மானிப்பாய் வீதி, - யாழ். )

றிச்சார்ட் (கோவிந்தசாமி அசோக்குமார்- வாரிக்குட்டியூர்- வவுனியா)

சசீலன் (பரந்தாமன் மங்களேஸ்வரன்- இரணை இலுப்பைக்குளம் - வவுனியா)

வேந்தன் (வை. செல்வநாயகம்- சின்னத்தம்பனை, நேரியகுளம்)

கப்டன் பெரியண்ணை/நீகன் தங்கத்துரை பரமலிங்கம்- தண்ணீரூற்று, முள்ளியவளை- முல்லைத்தீவு)

லெப். அமுதாப் (பிரான்சிஸ்திரேஸ் பத்மநாதன்- சிலாவத்தை - முல்லைத்தீவு)

போது பின்வருவோர் புதுவருட நிர்வாக சபையினராகத் தெரிவு செய்யப்பட்டனர்.
தலைவர்: செ. இரவீந்திரன் உப தலைவர்: ஆ. கந்தசாமி செயலாளர்; ந இரவிச்சந்திரன உப செயலாளர்: ச. நந்தகுமார், பொருளாளர்: வி. பாலராசன், விளையாட்டுப் பொறுப்பாளர்: ந. சிவனேஸ்வரன், கலாசாரப் பொறுப்பாளர்: செ. கிருஷ்ணராசன், நூல் நிலையப்பொறுப்பாளர். இ. திலகரத்தினம், பாலர் பாடசாலைப் பொறுப்பாளர்: ச. குணபாலசிங்கம்.

- பூக்களிலே

உரிமை உணர்வுகள் உரமாகிப் போனதால் - உன்
உதிரம் பெருக்கெடுக்க உயிரை விதைத்தவனே
உனை நேசித்த காரணத்தால் உள்ளங்கள் பல இங்கு
மண்ணை நேசிக்கும் மனத்தைப் பெற்றனவே

மனமெங்கும் மண்பாசம் கிளைவிட்டுப் பாய - உன்
மாறாத உறுதியுடன் செயல் ஓங்கி வாழும்
நிலம் மீட்க நெருப்பிலே நீ நீராடும் வேள்வி - ஈழ
மண் வாழும் காலம் வரை உன் புகழும் வாழும்.

இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஏனைய மாவீரர்களுக்கும் எம் கண்ணீர் அஞ்சலிகள்.

டச்சு வீதி,
வட்டு - கிழக்கு,
சித்தன்கேணி.

அம்மா, அப்பா, அக்கா,
நண்பர்கள், உறவினர்.

(3846)

30-09-1992

''சிறுவயதினிலே சிந்தனை பெற்றவனே
சுதந்திர காற்றை சுவாசிக்க எழுந்தவனே
சென்ற பாதையில் இடர்கள் கண்டவனே
உன் இடர்களை நினைக்கையிலே
எம் உள்ளம் கொதிக்குதையா''

இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது இதய அஞ்சலியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் சக போராளிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

உமது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

ஜெயந்திநகர்,
கிளிநொச்சி,
தமிழீழம்.

(சி-5634)

# 4-ம், 1-ம் ஆண்டு வீர நினைவஞ்சலிகள்



(இந்தியப்படையினருடனான மோதலில்)

**லெப். அசோக்**
(சிவகுரு சிறீதரன்)
ஜனனம்: 05-10-1966
வீரச்சாவு: 07-12-1988



(ஆ.க.வெ சமரில் காயமுற்று சிகிச்சையின்போது)

**2-ம்லெப். அசோகா**
(சிவகுரு இந்திரகுமாரி)
ஜனனம்: 23-10-1970
வீரச்சாவு: 28-12-1991



**சின்ன அசோக்**
(சிவகுரு இளங்கோதரன்)
ஜனனம்: 02-01-1972
இயற்கைமரணம்: 10-08-1991

மாவீரர்களே!...... மும்மணிச்சோதரர்களே
விடுதலை வேள்வியிலே உங்களையும் இணைத்தீர்கள்
தமிழீழம் தனை மீட்டிட காவியம் பல படைத்தீர்கள்
உறுதி கொண்டு ஈழமண்தனிலே சாவை அணைத்தீர்கள்
நாலாம், ஒராம் ஆண்டுகள் அல்ல - காலம் முழுவதும்
நிரந்தரமாக வீற்றிருக்கின்றீர்கள் எம் மனங்களில்......

பழைய பஸ் நிலையம்,
பத்திரகாளி கோவில் வீதி,
பருத்தித்துறை, தமிழீழம.

"சக போராளிகளையும் இன்றையதினம் கலந்து
கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்''

- குடும்பத்தினர்

(3868)

யப்படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமல் போன வற்றாப்பளையைச் சேர்ந்த கணவன், மனைவி. மற்றும் 2- குழந்தைகள்.

1989ஆம் ஆண்டு முசல்குத்திப் பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய-

இவான் (லோகேஸ்வரன் மனோகரன் - பிரதானவீதி, சங்கானை- யாழ் )

தனம் (வடிவேலு சிவபாலன்- 97/2, மானிப்பாய் வீதி, - யாழ். )

றிச்சார்ட் (கோவிந்தசாமி அசோக்குமார்- வாரிக்குட்டியூர்- வவுனியா)

சசீலன் (பரந்தாமன் மங்களேஸ்வரன்- இரணை இலுப்பைக்குளம் - வவுனியா)

வேந்தன் (வை. செல்வநாயகம்- சின்னத்தம்பனை, நேரியகுளம்)

கப்டன் பெரியண்ணை/நீகன் தங்கத்துரை பரமலிங்கம்- தண்ணீரூற்று, முள்ளியவளை- முல்லைத்தீவு)

லெப். அமுதாப் (பிரான்சிஸ்திரேஸ் பத்மநாதன்- சிலாவத்தை - முல்லைத்தீவு)

அருள் (நா. நாகராசா)

கங்கை (நடராசா ராஜேஸ்வரன் - இல. 48, கணேசபுரம்- கிளிநொச்சி)

இதே பகுதியில தேசவிரோதிகளின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

கப்டன் .சுதர்சன் (வே. ஆறுமுகநாதன்-திருக்கோணமலை)

சாள்ஸ் (ஜெகதீஸ்வரன்-கணுக்கேணி, முள்ளியவளை- முல்லைத்தீவு)

2ம்.லெப்.சீலன் (பரஞ்சோதிராஜா உமாகாந்தன்- குலசிங்கம் வீதி, துணுக்காய்)

யாழ்-கொடிகாமம் பகுதியிற் தேசவிரோத சக்திகளினால, தனது வியாபார நிலையத்தின் முன்னால் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட.

நாட்டுப்பற்றாளரான-
[குளிர்பான நிலைய உரிமையாளர்]

நடேசு (கச்சாவெளி, பளை-கிளிநொச்சி)

1990-ம் ஆண்டு வீமன்காமம்பகுதியில் சிறிலங்காப் படையினருடானான சமரில் வீரச்சாவெய்திய-

பாலா (இராசையா தவனேசன்-நாவற்காடு, அச்சுவேலி தெற்கு-யாழ்)

நானாட்டான் பகுதியில். வங்காலை முகாமிலிருந்து முன்னேறிவர முயன்ற சிறிலங்காப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

கெனட் (பாக்கியராசா அன்ரனி பேனாட் (அலஸ்) பனங்கட்டிக்கொட்டு-மன்னார்)

1991-ம் ஆண்டு, ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது விழுப்புண்ணடைந்து மருத்துவமனையில் சிகிச்சையின்போது வீரச்சாவெய்திய-

2ம்-லெப் அசோகா (இந்திரகுமாரி சிவகுரு- அசோக்வீதி, புலோலிமேற்கு, பருத்தித்துறை-யாழ்)

மட்டு சத்துருக்கொண்டான் பகுதியில சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

கௌரி/செல்வராஜ் (கருவேப்பங்கேணி - மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5659)

## சிந்தனைக்கு

பிறரின் அன்பை விரும்பாமல், அச்சத்தை விரும்புபவரின் அதிகாரம், வெறுப்புக்குரியதே; அவர்களின் வாழ்க்கை, பரிதாபத்துக்குரியது.

- கொர்னீலியல் நியாஸ்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 28- 12- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05

# சமாதானத்தை துரத்தியடிக்கும் திட்டம்

சிறிலங்கா இராணுவத் தளபதிகளும், அரசியல் வாதிகளும் தமிழருக்கு எதிரான யுத்தமுழக்கத்தை நிறுத்துவதாக இல்லை. இனப் பிரச்சினைத் தீர்விற்கு ஒரே தீர்வு இராணுவத் தீர்வுதான் என்பதில் அவர்கள் கருத்துமுரண்பாடு கொண்டிருக்கவில்லை. கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகத் தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வன சிங்காவிலிருந்துபிரதிச் சபாநாயகர் காமினி பொன்சேகாவரை யுத்தத்தை விரிவுபடுத்தவே முயற்சிக்கின்றனர்

''விடுதலைப் புலிகளை வெற்றி கொள்ளும் வரை இராணுவம் புலிகளுக்கு எதிராகத் தொடர்ந்து போராடும்'' என ஜெனரல் ஹமில்டன் வன சிங்கா தெரிவித்துள்ள அதேவேளை, ஜனாதிபதி பிரேமதாசாவின் வெளிவிவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் ''1994 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலுக்கு முன் சமாதானம் ஏற்படும் எனவும், அது இராணுவத்தின் முன்னணி நடவடிக்கை மூலமே சாத்தியமாகும்" எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரதிச் சபாநாயகர் காமினி பொன்சேகா போரில் ஈடுபட்டுள்ள இராணுவத்தின் தேவைகளை அரசாங்கம் கவனிக்கத் தவறிவிட்டது எனப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார்; அவர் இராணுவத்தினருக்கு தேவையான பொருள்களை சிங்கள மக்களிடம் இருந்து சேகரித்து வழங்கிவருகின்றார். அதாவது யுத்தத்தை ஒவ்வொரு சிங்களவர்கள் இடத்திலும் நேரடியாகக் கொண்டு சேர்க்கும் பணியில் பிரதிச் சபாநாயகர் ஈடுபட்டுள்ளார்.

1991 ஆம் ஆண்டு, இறுதியில், வடக்கு கிழக்குப் போரில் சிறிலங்கா இராணுவத்தின் கை ஓங்கியிருந்ததாக சிறிலங்கா இராணுவத் தரப்பிலும், அரசியல் தரப்பிலும் கருதப்பட்டது. ஆனால், அப்பொழுது மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளுக்கும் சிங்கள இராணுவ, அரசியற் தரப்பும் எதிர்ப்பே தெரிவித்தன. விரைவில்

# மேற்குலக தார்மீகமும் தமிழர் தேசியப் பிரச்சினையும்

உலகின் பல பகுதிகளில் இன்று எரிமலையாகக் கொந்தளித்துக் கொண்டிருக்கும் பல தேசிய நெருக்கடிகளுக்கு, மேற்கத்தைய காலனித்துவ வரலாறு மூலகாரணியாக அமைகிறது. சுதந்திரமாக, நிம்மதியாக வாழ்ந்துவந்த நாடுகளை ஆக்கிரமித்து, அரசுகளைக் கவிழ்த்து, எல்லைகளை மாற்றியமைத்து, பொருளாதார வளங்களைச் சுரண்டிச் சூறையாடி, தேசிய இனங்களைச் சிதைத்து, பண்பாடுகளைச் சீரழித்து மேற்குலக காலனித்துவம் நிகழ்த்திவிட்டுச்சென்ற அனர்த்தங்களால், இன்றும் மூன்றாம் உலகம் இரத்தம் சிந்திக் கொண்டிருக்கிறது. தமிழீழ நாடும் இந்தக் காலனித்துவப் புயலில் சிக்கிச் சிதையுண்டது; இறைமையை இழந்தது; அரச ஆட்சி உரிமையைப் பறிகொடுத்தது.

தமிழீழத்தின் இன்றைய அரசியல் அவலநிலைக்கு ஆங்கிலேய காலனித்துவம் ஒரு அடிப்படைக் காரணம். ஆங்கிலேயர் இதனை மறுக்க முடியாது; இரத்தக்கறை படிந்த இந்த வரலாற்றை மூடி மறைக்க முடியாது.

தமிழரின் தேசிய பிரச்சினைக்கும் அதனால் எழுந்த தமிழின அழிப்பிற்கும்மூலகர்த்தா என்ற முறையில் பிரித்தானியாவுக்கு, தமிழர்மீது காருண்ணியம் காட்டவேண்டிய ஒரு மனிதாபிமானக் கடப்பாடு இருக்கிறது. முன்பு இழைத்த பாவங்களுக்குப் புண்ணியம் தேடிக் கொள்ளும் வகையிலாவது, தமிழருக்கு நீதி பெற்றுக் கொடுக்கும் ஒரு தார்மீகக் கடன் இருக்கிறது: அப்படியிருக்க, தமிழர் பிரச்சினையில் பிரித்தானியா எவ்வித நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கிறது?

தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை என்ற தமிழரின் அடிப்படைக் கோரிக்கைகள் எதையுமே ஏற்றுக் கொள்ள பிரித்தானியா மறுக்கிறது. அது தான் போகட்டும் என்றால் தமிழரின் ஆயுத வடிவெடுத்த உரிமைப் போராட்டத்தைப் ''பயங்கரவாதம்'' என்றுவர்ணிப்பதுடன், தமிழரின் உரிமைக்காக இரத்தம் சிந்திப் போராடும் விடுதலைப் புலிகளை ''பயங்கரவாதிகள்.'' என்றும் ஆங்கில அரசு முத்திரைகுத்த முயல்கிறது. அத்துடன் நின்றுவிடாது இனவெறி பிடித்தசிங்கள அரசுக்கு தனது ஆயுதச் சந்தையையும் அகலத் திறந்து விட்டிருக்கிறது. மனித உயிர் அழிப்பிலும், மனித உரிமை மீறலிலும் உலக சாதனையை நிலைநாட்டி நிற்கும்பிரேமதாசா அரசுக்கு ஆயுதங்களை அள்ளிக்கொடுத்தால் அவையார் மீது பிரயோகிக்கப்படும் என்பது, உலகஅனுபவம் நிறைந்த காலனித்துவக் கிழட்டு நரிக்குத் தெரியாத விடயமாக இருக்க முடியாது. இப்படியாக பிரித்தானியா தமிழர் மீது தனது தார்மீகக் கடப்பாட்டைக் கடைப்பிடித்து காருண்ணியத்தைச் சொரிந்து வருகிறது மேற்குலகத்தின் தார்மீகம் மனுநீதியை அடிப்படையாகக் கொண்டதல்ல. அப்பட்டமான சுயநல, பொருளாதார, வர்த்தக நலன்களையேமுதன்மையாகக்கொண்டது என்பதற்கும், பிரித்தானியாவின் இந்த வெளியுறவுக் கொள்கை, ஒரு சிறந்த உதாரணம். மூன்றாம் உலக நாடுகளின் சர்வாதிகார அரசுகளுக்கும் சனநாயக விரோத சக்திகளுக்கும் முண்டுகொடுத்து நிற்கும். மேற்குலகம், இந்நாடுகளில் மனித உரிமைகள் மீறப்படுவதாக ஒப்பாரிவைப்பது, மிகவும் கேலிக்கூத்தான அரசியல்பாசாங்கு என்றேசொல்லவேண்டும்.

மனுதர்மம் போதிப்பதற்கு ஒரு தார்மீக அடிப்படை அவசியம். மேற்குலகவல்லரசுகளிடம் அன்றும்சரி, இன்றும் சரி, இந்தத் தார்மீக அடிப்படை இருக்கவில்லை. நீண்ட கொடிய காலனித்துவ வரலாறும் தொடர்ந்து நிகழ்த்தி வரும் நவகாலனிய சுரண்டல்களும், தலையீடுகளும், ஆக்கிரமிப்புகளுமாக மேற்குலகம் மிகவும் அநாகரிகமான, அதர்மமான சுயநலப் போக்கையே கடைப்பிடித்து வருகிறது. அப்பாவிகளான ஜப்பானிய வெகுசனம்மீது அணுகுண்டுகள் வீசிய அமெரிக்கா, ஜேர்மனிய நகரங்களைச் சுடுகாடாக்கிய பிரித்தானியா, அறுபது லட்சம் யூதர்களை அழித்தொழித்த ஜேர்மனி, அல்ஜீரியாவில் இனக்கொலை புரிந்த பிரான்ஸ் — இப்படியாக சமீபத்திய பாலைவனப் புயல்வரை, யுத்த நிர்ப்பந்தம் என்றநியாயப்பாட்டில் மேற்குலகம் மனிதகுலப் படுகொலைகளைப் புரிந்திருக்கிறது. இப்படியாக இரத்தக்கறை படிந்தவரலாற்றைக்கொண்ட மேற்குலக நாடுகள் போர்த்தர்மம் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் மூன்றாம் உலகிற்குப் போதனை செய்து வருவது விந்தையாக இருக்கிறது. இந்த லட்சணத்தில் எமது விடுதலைப் போராட்டத்தை ''பயங்கரவாதம்'' என வர்ணிப்பதற்கு, இந்த நாடுகளுக்கு எந்தவித தார்மீகத் தகுதியும் இல்லை.

தனிமனித சுதந்திரம் முக்கியமானது. தனிமனித உரிமை அத்தியாவசியமானது, இவை மீறப்படுவது கண்டனத்திற்குரியது. ஆனால் தனிமனிதர்களின் கூட்டுமொத்தத் திரளாக வியாபித்து நிற்கும் ஒரு இனத்தின் அல்லது தேசத்தின் உரிமையும் சுதந்திரமும் எல்லாவற்றையும் விட முக்கியமானது. ஒரு தேசத்தின் அல்லது இனத்தின் உரிமைகளும் சுதந்திரங்களும் மீறப்படுவதை அலட்சியம் செய்துவிட்டு, தனிமனித உரிமை மீறல்களுக்கு மேற்குலகம் முக்கியத்துவம் கொடுக்கிறது. தனிமனித உரிமைஎன்ற தார்மீகத் தத்துவார்த்தவரையறைகளுக்குஅப்பால் விஸ்வரூபப் பரிமாணம் பெற்று நிற்கும் இன உரிமைப் பிரச்சினைகளைப் பார்க்க மறுக்கிறது. இதனால், தனிமனிதச் சாவுகளுக்குக் கண்ணீர் வடிக்கும் மேற்குலகம் இனவாரியாகச் சமூகம் அழிவதைக் கண்டும் வாய்மூடி மௌனம் சாதிக்கிறது.

தமிழீழத்தின் ஒரு இனப்படுகொலை நடக்கிறது; இந்த அநீதிக்கு எதிராக நாம் போராடுகிறோம். இனப்படுகொலைக்கு எதிரான எமது உரிமைப் போராட்டத்தைப் பயங்கரவாதம் எனக் கண்டித்துவிட்டு, தனி மனித உரிமைகள் பற்றி மேற்குலகம் போதிக்கிறது, இது, சாத்தான் வேதம் ஓதுவதைப் போன்ற மிகவும் கேலிக்கூத்தான விவகாரமாகும்.

நன்றி:

விடுதலைப்புலிகள்

# தமிழகதேர்தலில் காங்கிரஸ் விரும்பின் தனித்துப் போட்டியிடட்டும்

## - ஜெயலலிதா

(சென்னை)

தமிழ்நாட்டில் நடைபெறவிருக்கும் இடைத்தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி தனித்துப்போட்டியிட விரும்பினால் அண்ணா தி.மு.க. அதைப்பற்றிக் கவலைப்படாது என்று பொதுச்செயலாளரும், தமிழக முதல்வருமான ஜெயலலிதா கூறியுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற இக்கழகத்தின் பொதுச்சபைக் கூட்டத்தில் நிறைவுரையாற்றிய அவர்மேலும் கூறுகையில்: கூட்டணி என்பது ஒரு வழிப் பாதையாக இருக்க முடியாது என்றும், கூட்டணிக்கு காங்கிரஸ்கட்சி பேச்சளவில் மட்டும் தான் ஆதரவளிக்கிறது என்றும், தமிழக அரசைக் குறை கூறுபவர்களுடன் டில்லி நட்புறவு பாராட்டுகிறது என்றும் தெரிவித்தார்.

அத்துடன், கடந்த தேர்தலில் அ.இ.அ.தி.மு.க-காங்கிரஸ் கூட்டணி பெருவெற்றியைப் பெற்ற போதிலும், காங்கிரஸ் அ.இ.அ.தி.மு.க.வை உரிய மரியாதையுடன் நடத்தவில்லை என்றும், தமிழக அரசைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கையில் மத்திய அரசு ஈடுபட்டிருப்பதாகவும், தமிழக

# மக்கள் எல்லா நிலையிலும் சகித்துக் கொள்ள வேண்டும்

## - தமிழக ஆளுநர் பீஷ்மநாராயண்சிங்

[சென்னை]

உயர் பண்புகளை அடிப்படையாகக் கொண்ட அரசியலே தற்போது நாட்டுக்குத் தேவை எனவும், மக்கள் எல்லாநிலையிலும் சகிப்புத்தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும், தமிழக ஆளுநர் பீஷ்மநாராயண் சிங் கூறி நூலொன்றை வெளியிட்டு வைத்த வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்; நாட்டுக்கு கேடு விளைவிக்கும் பிரிவினைவாத சக்திகள் முற்படுவது அண்மையில் நடந்த சம்பவங்கள் மூலம் தெரிய வந்திருப்பதாகவும், இத்தகைய சூழல் ஜன

# ஐ.நாவின் விசேட தூதுவர் ஜெருசலேம் சென்றடைந்தார்

(ஜெனீவா)

ஐக்கிய நாடுகள் சபையின் விசேட தூதுவர் ஒருவர் நேற்று ஜெருசலேம் போய்ச் சேர்ந்தார். இஸ்ரேலிலிருந்து நானூறு பலஸ்தீனியர்கள் வெளியேற்றப்பட்ட சூழ்நிலை, மற்றும் இவர்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்க இஸ்ரேலும், லெபனானும் மறுப்பது போன்ற விடயங்கள் குறித்து இவர் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இவர் அங்கு தங்கியிருக்கும் போது இஸ்ரேலிய பிரதமர் யிட்சாக் ரபீன், வெளிநாட்டமைச்சர் சிமொன் பெரஸ் மற்றும் சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் பாலஸ்தீனிய தூதுக்குழு உறுப்பினர்கள் உட்பட பல்வேறு தரப்பினருடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளார். அத்துடன் வெளியேற்றப்பட்ட நிலையில் மனித நடமாட்ட மற்ற பகுதியில் தங்கியிருக்கும் பாலஸ்தீனியர்களை நாளை செவ்வாயன்று நேரில் சென்று பார்வையிட இருக்கிறார்.

# இரசாயன ஆயுத பரவல் தடுப்பதில் உடன்பாடில்லை

## - அரபுநாடுகள் முடிவு

(செய்ரோ)

இரசாயன ஆயுதங்கள் பரவுவதைத் தடுப்பது தொடர்

உடன்படிக்கையில் இஸ்ரேல் கைச்சாத்திட்டாலொழிய இந்த ஒப்பந்தத்தில் அரபுநாடு

வும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரதிச் சபாநாயகர் காமினி பொன்சேகா போரில் ஈடுபட்டுள்ள இராணுவத்தின் தேவைகளை அரசாங்கம் கவனிக்கத் தவறிவிட்டது எனப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார்; அவர் இராணுவத்தினருக்கு தேவையான பொருள்களை சிங்கள மக்களிடம் இருந்து சேகரித்து வழங்கிவருகின்றார். அதாவது யுத்தத்தை ஒவ்வொரு சிங்களவர்கள் இடத்திலும் நேரடியாகக் கொண்டு சேர்க்கும் பணியில் பிரதிச் சபாநாயகர் ஈடுபட்டுள்ளார்.

1991 ஆம் ஆண்டு, இறுதியில், வடக்கு கிழக்குப் போரில் சிறிலங்கா இராணுவத்தின் கை ஓங்கியிருந்ததாக சிறிலங்கா இராணுவத் தரப்பிலும், அரசியல் தரப்பிலும் கருதப்பட்டது. ஆனால், அப்பொழுது மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளுக்கும் சிங்கள இராணுவ, அரசியற் தரப்பும் எதிர்ப்பே தெரிவித்தன. விரைவில் ஏற்படப்போகும் முழுமையான இராணுவ வெற்றியின் பின் இனப்பிரச்சினைக்கு - பெரும்பாலும் விடுதலைப் புலிகள் இன்றியே - தீர்வு ஒன்றைத் திணிக்கலாம் என நம்பினர். வெளிப்படையாகவும் விமர் ஆனால், நிலையில் ஏதும் முன்னேற்றம் ஏற்படவில்லை.

1992 இறுதியில் நிலைமை மாறியுள்ளது. யாழ். குடாநாட்டை இராணுவம் முற்றுகையிட முற்பட்டிருந்தாலும், இராணுவ அரசியல் ரீதியில் விடுதலைப் புலிகளின் கை ஓங்கியுள்ளது. இராணுவம் இவ் வருடத்தில் என்றுமில்லாத பாரிய இழப்புக்களைச் சந்தித்திருப்பினும். இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வு ஒன்று ஏற்படுவதை விரும்புவதாகத் தெரியவில்லை. ஆனால், அன்றைய நிலையில் ஒரு மாற்றம். அன்று இராணுவ வெற்றியுடன் இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிடலாம் என எண்ணி சமாதான பேச்சுக்களை நிராகரித்த இராணுவம் இன்று தோல்வியுடன் பேச்சுவார்த்தைக்குப் போக முடியாது என்ற நிலையில் உள்ளது.

அதாவது இராணுவம் வெல்லவும் முடியவில்லை, தோல்வியுடன் பேசுவதற்கும் தயாராகவும் இல்லை. இந் நிலையில் தொடர்ந்தும் இராணுவத் தீர்வை நாடுவதிலேயே இராணுவமும் அரசாங்கமும் விளைந்து நிற்கின்றன. ஆனால் இது குறித்து பல தடவை மக்களுக்கு நாம் சுட்டிக் காட்டியுள்ளோம். இருப்பினும் சிலர் அதை ஏற்றுக் கொள்ளாமலும் பேரினவாதத்தின் பேச்சை நம்பியவர்களும் உண்டு. இந் நிலையிலேயே மீண்டும் இதனைச் சுட்டிக்காட்ட வேண்டி வந்துள்ளது.

ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆலோசகர் பிரட்மன் கருத்துப்படி இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காண்பதற்கு இன்னும் இரண்டு வருடங்களை படையினருக்கு வழங்க அரசாங்கம் தயாராக இருப்பதாகத்தெரிகின்றது. அதாவது 1994 டிசம்பரில் வரவுள்ள ஜனாதிபதித் தேர்தல் வரை இக்கால அவகாசம் கொடுக்கப்படலாம் என்பது போல் உள்ளது. ஆனால், இக்கால அவகாசமும் இராணுவத் தீர்வும் ஒரு போதும் பிரச்சினைக்கு தீர்வையோ, அன்றி சமாதானத்தையோ கொண்டு வர மாட்டாது. மாறாக, பிரச்சினையை மேலும் சிக்கலாக்கி அழிவுகளுக்கே வழிவகுக்கும். சமாதானத்தை தூரத்திறகுத் துரத்தியடித்துவிடும்.

(சென்னை)

தமிழ்நாட்டில் நடைபெறவிருக்கும் இடைத்தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி தனித்துப்போட்டியிட விரும்பினால் அண்ணா தி.மு.க. அதைப்பற்றிக் கவலைப்படாது என்று பொதுச்செயலாளரும், தமிழக முதல்வருமான ஜெயலலிதா கூறியுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற இக்கழகத்தின் பொதுச்சபைக் கூட்டத்தின் நிறைவுரையாற்றிய அவர்மேலும் கூறுகையில்: கூட்டணி என்பது ஒருவழிப் பாதையாக இருக்க முடியாது என்றும், கூட்டணிக்கு காங்கிரஸ்கட்சி பேச்சளவில் மட்டும்தான் ஆதரவளிக்கிறது என்றும், தமிழக அரசைக் குறை கூறுபவர்களுடன் டில்லி நட்புறவு பாராட்டுகிறது என்றும் தெரிவித்தார்.

அத்துடன், கடந்த தேர்தலில் அ.இ.அ.தி.மு.க-காங்கிரஸ் கூட்டணி பெருவெற்றியைப் பெற்ற போதிலும், காங்கிரஸ் அ.இ.அ.தி.மு.க.வை உரிய மரியாதையுடன் நடத்தவில்லை என்றும், தமிழக அரசைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கையில் மத்திய அரசு ஈடுபட்டிருப்பதாகவும், தமிழக அரசுக்கு தெரியாமல் மத்திய அரசு தமிழகத்திற்கு இராணுவத்தை அனுப்பியிருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

## மக்கள் எல்லா நிலையிலும் சகித்துக் கொள்ள வேண்டும்

### - தமிழக ஆளுநர் பீஷ்மநாராயண்சிங்

[சென்னை]

உயர் பண்புகளை அடிப்படையாகக் கொண்ட அரசியலே தற்போது நாட்டுக்குத் தேவை எனவும், மக்கள் எல்லாநிலையிலும் சகிப்புத்தன்மையைக் கடைப்பிடிக்கவேண்டும் எனவும், தமிழக ஆளுநர் பீஷ்மநாராயண் சிங் கூறியுள்ளார்.

சென்னையில் சுதந்திரப் போராட்ட வீரர், தாதாபாய் நவரோஜி பற்றிய நூலொன்றை வெளியிட்டு வைத்த வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்; நாட்டுக்கு கேடு விளைவிக்க பிரிவினைவாத சக்திகள் முற்படுவது அண்மையில் நடந்த சம்பவங்கள் மூலம் தெரிய வந்திருப்பதாகவும், இத்தகைய சூழல் ஜனநாயகக் கட்டமைப்பிற்குகேடு விளைவித்து விடக்கூடும் எனவும் தெரிவித்தார்.

# இந்துபாஸிஸத்தை முறியடிக்க அனைவரும் ஒன்றுசேருங்கள்

### இந்திரா காங்கிரஸ் கோரிக்கை

(டில்லி)

இந்துப் பாஸிஸவாதத்தை முறியடிக்க ஒன்று சேருங்கள் என்று காங்கிரஸ் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது. இந்தியாவின் சிறுபான்மை முஸ்லிம்களை இலக்கு வைப்பதன் மூலம் பாரதீய ஜனதாக்கட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முயல்வதாகவும் அக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

காங்கிரஸ்கட்சியின் பேச்சாளரான வி. என். காட்கில் செய்தியாளர்களிடையே பேசுகையில் பாரதீய ஜனதாக் கட்சியின் தந்திரோபாயங்கள் இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கு முன்பாக ஐரோப்பிய பாஸிஸ வாதிகள் கடைப்பிடித்த தந்திரோபாயங்களுக்கு நிகரானவை என்று வர்ணித்தார்.

இத்தாலியிலும், ஜேர்மனியிலும் ஜனநாயகத்தை முறியடிக்க பாஸிஸ வாதிகள் கையாண்ட அதே யுத்திகளைத்தான், பாரதீய ஜனதா பின்பற்றுவதாகவும், சிறுபான்மையினரை இலக்கு வைத்து தாக்குவதாகவும் காங்கிரஸ்கட்சி நிறைவேற்றிய தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாரதீய ஜனதாவின் முயற்சிக்கு ஜனதாதள் ஆதரவளிக்காது

### வி. பி. சிங்

மத்திய அரசைக் கவிழ்க்க பாரதீய ஜனதாக்கட்சி எடுக்கும் எந்த முயற்சியையும் ஜனதாதளம் ஆதரிக்காது என்று முன்னாள் பிரதமரும் ஜனதாதளம் தலைவருமான வி. பி. சிங் கூறியுள்ளார். சென்னையில் கடந்தவெள்ளி செய்தியாளர்களிடையே பேசுகையில் மேலும் பாரதீய ஜனதாவுடன் தமது கட்சி எந்த விதத்திலும் ஒத்துப் போகாது எனவும், தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்சிலில் மதச்சார்பற்ற சக்திகள் கொடுத்த ஒத்துழைப்பு பயன்தரவில்லை எனவும் தெரிவித்தார், அத்துடன் தமிழ் நாட்டில் அரசியல் கட்சித் தலைவர்கள் தாக்கப்படுவது பற்றிக் குறிப்பிடுகையில் இது தவறான அணுகுமுறை என்றும் அவர் வர்ணித்தார்.

## காங்கிரசின் யோசனைகள் நிராகரிக்கப்பட்டன

(டில்லி)

அயோத்தி விவகாரம் தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் காரியக்கமிட்டி முன் வைத்துள்ள யோசனைகளை பாரதீய ஜனதாக் கட்சியும் ஜனதாதளமும் நிராகரித்து விட்டுள்ளன.

அயோத்தி விவகாரம் முழுவதையும் உச்ச நீதிமன்றத்திடம் விடுவதற்கு இன்னும் காலம் கடந்து விடவில்லை. என்று ஜனதா தள்ளின் துணைத் தலைவரான கிறரி கிசோர் சிங் சுர்ஜித் கூறியுள்ளார். இதேவேளை காங்கிரஸ் காரியக் கமிட்டி முன் வைத்த யோசனையின் ஒவ்வொரு அம்சத்தையும் எதிர்ப்பதாக பாரதீய ஜனதாவைச் சேர்ந்த சுந்தர்சிங் பண்டாரி தெரிவித்திருக்கிறார்.

## லண்டனில் குண்டு வெடிப்பு

வட அயர்லாந்திலுள்ள ஒரு பொலிஸ் நிலையத்தின் அருகே நேற்றுக் காலை இரண்டு குண்டுகள் வெடித்தன. இதனால் நத்தாரை முன்னிட்டு கடைப்பிடிக்கப் பட்டதாக கூறப்பட்ட போர் நிறுத்த உடன்பாடு முடிவுக்கு வந்துள்ளது என அறிக்கைகள் கூறுகின்றன. அயரிஷ் குடியரசு இராணுவத்தால் அறிவிக்கப்பட்ட 72 மணிநேர யுத்த நிறுத்தத்தின் முடிவில் இக்குண்டுகள் வெடித்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நேற்று ஜெருசலேம் போய்ச் சேர்ந்தார். இஸ்ரேலிலிருந்து நானூறு பலஸ்தீனியர்கள் வெளியேற்றப்பட்ட சூழ்நிலை, மற்றும் இவர்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்க இஸ்ரேலும், லெபனானும் மறுப்பது போன்ற விடயங்கள் குறித்து இவர் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இவர் அங்கு தங்கியிருக்கும் மற்றும் சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் பாலஸ்தீனிய தூதுக்குழு உறுப்பினர்கள் உட்பட பல்வேறு தரப்பினருடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளார். அத்துடன் வெளியேற்றப்பட்ட நிலையில் மனித நடமாட்ட மற்ற பகுதியில் தங்கியிருக்கும் பாலஸ்தீனியர்களை நாளை செவ்வாயன்று நேரில் சென்று பார்வையிட இருக்கிறார்.

## இரசாயன ஆயுத பரவல் தடுப்பதில் உடன்பாடில்லை

### - அரபுநாடுகள் முடிவு

(கெய்ரோ)

இரசாயன ஆயுதங்கள் பரவுவதைத் தடுப்பது தொடர்பான உடன்பாடு ஒன்றில் கையெழுத்திடுவதற்காக அடுத்த மாதம் பதின்மூன்றாம் திகதி பாரிசில் நடைபெறவிருக்கும் கூட்டத்தொடரை ஏனைய அரபு நாடுகளுடன் இணைந்துபகிஷ்கரிக்கப்போவதாக எகிப்து கூறியுள்ளது.

எகிப்திய வெளியுறவு அமைச்சரான ஓமார் மூசா வார இதழொன்றிற்கு பேட்டியளிக்கையில் மேலும் கூறியதாவது; அணுஆயுதப் பரவல் தடுப்பு உடன்படிக்கையில் இஸ்ரேல் கைச்சாத்திட்டாலொழிய இந்த ஒப்பந்தத்தில் அரபுநாடுகள் கையொப்பமிடாது எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் பொஸ்னியா, ஹர்சகோவியாவில் இருக்கும் முஸ்லிம்களின் பாதுகாப்புகுறித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை திட்டவட்டமான செயற்பாடுகளை மேற்கொள்ள தவறினால் இப்பிரச்சினை பற்றிவிவாதிக்க இஸ்லாமிய உச்சிமாநாடு ஒன்றிற்கு அழைப்பு விடப்படும் என்றும் தெரிவித்தார்.

அமெரிக்காவின்

## புதிய வெளிநாட்டமைச்சராக வாரன் கிறிஸ்தோபர் தெரிவு

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் புதிய அதிபராக பொறுப்பேற்க இருக்கும் பில்கிளின்டன் தனது வெளிநாட்டு அமைச்சராக வாரன் கிறிஸ்தோபரையும், பாதுகாப்பு அமைச்சராக லாஸ் அஸ்பினையும் நியமித்துள்ளார்.

மற்றும் முன்னாள் கடற்படையின் உதவிக் காரியதரிசி ஜேம்ஸ் உல்ஸ்லி சி. ஐ. ஏ. அமைப்பின் டைரக்டராகவும், வெள்ளைமாளிகையின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக அந்தனி லேக்கும், பதவி ஏற்கவுள்ளனர்.

அத்துடன் ஐ.நாவிலிருக்கும் அமெரிக்க தூதுவரின் அந்தஸ்தை ஓர் அமைச்சரின் தரத்திற்கு உயர்த்தியுள்ள பில்கிளின்டன் அப் பதவிக்கு ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழக பேராசிரியரான மெடலைன் அல்பிரட்டையும், உதவி வெளிநாட்டமைச்சராக கிளிபோர்ட் வார்டனையும், உதவித் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக சாமுவேல் பேர்ஜரையும் நியமித்துள்ளார்.

## அமெரிக்க அதிபர் புஷ் சோமாலியா விஜயம்

(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தனது புத்தாண்டுதின விடுமுறையை சோமாலியாவில் கழிக்க இருக்கின்றார்.

புஷ் தனது பதவிக்காலத்தில் கறுப்பு ஆபிரிக்கா நாடொன்றிற்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இது என்பதும், அமெரிக்க இராணுவத்தின் பிரதம தளபதி என்ற முறையில் துருப்புகளுடன் கழிக்கும் கடைசி விடுமுறையாக இது இருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி புஷ் தனது பதவிக் காலத்தில் 5,90,094 மைல் பிரயாணம் செய்துள்ளார் என்பதும் இது அவர் மேற்கொள்ளும் இருபத்தைந்தாவது வெளிநாட்டுப் பயணம் என்பதும் மேலும் குறிப்பிடக்கூடியது.

ஈழநாதம்

# சைக்கிள் திருட்டு

மாதகல் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து ஆனைக்கோட்டை உயரப்புலம் பகுதியில்தங்கியுள்ள ஒருவரின் சைக்கிள் நத்தார் நள்ளிரவு திருடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

வீட்டிலுள்ளவர்கள்நத்தார் நள்ளிரவு திருப்பலிக்கு சென்றிருந்த வேளை வீட்டு முற்றத்திறாந்தையில் பூட்டி வைக்கப்பட்டிருந்த சைக்கிளே திருட்டுப் போயுள்ளதாம். (21)

# புகைப்படக் கலை அறிமுக பயிற்சி நெறி

புறநிலைப்படிப்புகள் அலகின் ஆதரவில் புகைப்படக் கலைகள் அறிமுகம் என்னும் பயிற்சிநெறி பல்கலைக்கழகத்தில் 1993 ஜனவரி மாதம் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. ஆர்வமுள்ள 40 மாணவர்கள் முதல் தொகுதிப் பயிற்சி நெறியில் பங்குபற்றலாம் இப் பயிற்சி நெறி 30 மணித்தியாலங்கள் ஆகும்.

சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பல்கலைக்கழகத்தில் பயிற்சி நெறி இடம்பெறும். விரிவுரைகள், கலந்துரையாடல்கள், செய்முறைகள் மூலம் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. ஆர்வமுள்ளவர்கள் புகைப்படக்கலையில் தங்கள் ஈடுபாட்டைக் குறிப்பிட்டு 1993 ஜனவரி 06ஆம் திகதிக்கு முன்பதாக விண்ணப்பிக்குமாறு யாழ். பல்கலைக் கழக புறநிலை படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# மிதிவெடியில் இருபடையினர் காலிழப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் மிதி வெடியில் சிக்கிய இராணுவத்தினர் இருவர் தமது கால்களை இழந்தனர்.

அம்பாறை மாவட்ட அனுனதீவு பகுதியில் ரோந்து சென்ற இராணுவத்தினர் இருவரே இவ்வாறு கால்களை இழந்தனர் என கூட்டுப்படை தலைமை அலுவலகம் தெரிவித்துள்ளது.

# உறவைத் துண்டிக்க விரும்பின் அ. தி. மு. க. துண்டிக்கலாம்

## - வாழப்பாடி தெரிவிப்பு

(சென்னை)

காங்கிரஸ் கட்சியுடனான கூட்டணி உறவைத் துண்டித்துக் கொள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் விரும்பினால் அக்கட்சி தாராளமாக பிரிந்து செல்லலாம் என்று தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி கே. இராமமூர்த்தி கூறியுள்ளார். அவர் மேலும்கூறுகையில்; இதற்காக காங்கிரஸ் கட்சி வருந்தாது எனவும் குறிப்பிட்டார்.

அததுடன் தீர்வு காணப்பட்ட விடயங்களை எதிர்த்து அ இ அ. தி. மு. க. பொதுக்குழு தீர்மானங்களை நிறைவேற்றியிருப்பது அரசியல் முதிர்ச்சியின்மையையேகாட்டுதாகவும், பொதுக் குழு உறுப்பினர்கள் செல்வி ஜெயலலிதாவின் கவனத்தை ஈர்ப்பதற்காக இவ்விதம் பேசினார்களா? அல்லது ஜெயலலிதாவே தூண்டிவிட்டு பேசவைத்தாரா என்பது தெளிவாகத் தெரியவில்லை எனவும் குறிப்பிட்டார்.

மேலும் நூற்றாண்டுக்குமேலாகப் பழமை வாய்ந்த காங்கிரஸ் கட்சியையும், அதன் தலைமையையும் அ.இ.அ தி. மு க. விரசமாக விமர்சித்திருப்பது கண்டனத்திற்குரியது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழகத்தில் இராணுவத்தின் நடமாட்டம் பற்றியும், கூட்டணிக்கு குறுக்கே எவரும் வரமுடியாது என்பது பற்றியும் சென்னை விமானநிலையத்தில் நடந்த சந்திப்பின் போது பிரதமர் நரசிம்மராவ் ஜெயலலிதாவிற்கு விளக்கியிருந்தார் எனவும், அப்போது திருப்தி அடைந்தஜெயலலிதா பின்னர் அதற்கெதிராகத் தீர்மானம் நிறைவேற அனுமதித்திருப்பது அநாகரிகமானது என்றும் அவர் தெரிவித்தார்.

தி.மு.க. அரசைக் கலைப்பதற்காக காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து பாடுபட்ட ஜெயலலிதா இப்போது அரசியலமைப்பின் 356-வது பிரிவு பற்றிப் பேசுவது வேடிக்கையானது எனவும் குறிப்பிட்டார்.

# கலந்துரையாடல்

இன்று பி. ப 3-00மணிக்கு புனித மரியாள் பாடசாலையில், நளா கல்வி வளர்ச்சிக் கழக ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நடைபெற இருப்பதால், இதில் அவ்வாசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, தீவக கல்விக்கோட்டத்தினர் கேட்டுக்கொள்கின்றார்கள்.

# நில அளவையாளர் பரீட்சை

நில அளவையாளர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் இம் மாதம் 30 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நடைபெறும் இப்பரீட்சைக்கு ரூபா. 75/-ஐ பரீட்சைக் கட்டணமாகச் செலுத்தி, பரீட்சை ஆணையாளருக்கு விண்ணப்பத்தை அனுப்பியவர்கள் மாத்திரமே தோற்றலாம்.

இதற்கான அனுமதி அட்டைகள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதுவரை அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் தாம் இப்பரீட்சை முடிவு திகதிக்கு முன்னர் விண்ணப்பித்தமைக்கான ஆதாரமாகவுள்ள அஞ்சலக பதிவுத் தபாலுக்கானபற்றுச்சீட்டையும், தமது அடையாள அட்டையையும் யாழ். கல்வித்திணைக்களத்தில் இன்று 28ஆம் திகதி சமர்ப்பித்து அனுமதி அட்டைகளைப்பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் இவர்கள் இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பப் படிவப் பிரதி ஒன்றையும் கல்வித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு பிரதேசக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# மாநில அரசுகளை கலைக்கும் அரசியல் சாசன விதியை கடுமையாக்க வேண்டும்

## -நரசிம்மராவ் தெரிவிப்பு

மாநில அரசுகளை கலைப்பதற்கு வழிசெய்யும் இந்திய அரசியல் சாசனத்தில் 356 ஆவது பிரிவை கடுமையாக்க வேண்டும் என்றும் அதன் மூலம் மாநில அரசுகள் கலைக்கப்படுதலை எளிதாக்க வேண்டும் என்றும் இந்திய பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கூறியுள்ளார்.

இதேவேளை இந்த 356 ஆவது விதிமுறையின்மேல் தேசிய அளவிலான விவாதம் ஒன்றை நடத்தவேண்டும் என பாரதீய ஜனதாக்கட்சி கோரியுள்ளது. மேலும் இப்பிரிவை நீக்கவேண்டும் என நேற்று முன்தினம் ஜெயலலிதா தலைமையிலான அண்ணாதிராவிட முன்னேற்றகழகம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளமை தெரிந்ததே

அத்துடன் மற்றைய எதிர்க்கட்சிகளும் மத்திய அரசு அடிக்கடி 356 ஆவது பிரிவை உபயோகிப்பதற்கு கண்டனம் தெரிவித்துள்ளன.

# பாப்பரசர் வாழ்த்துச் செய்தி

(வத்திக்கான்)

இன்று உலகிற்கு தேவை சமாதானமும், அமைதியும் இதுவே இலங்கை மக்களுக்கு தேவை சமாதானமும் அமைதியும் கிடைக்க பிரார்த்திக்கிறேன் இவ்வாறு பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் நத்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

# ராமர் கோவிலில் வழிபாடு; எவரும் தடுக்க முடியாது

## - பாரதீயஜனதா தெரிவிப்பு

(டில்லி)

தகர்க்கப்பட்ட பாபர் மசூதி இருந்த இடத்தில் கட்டப்பட்ட இந்துக் கோயிலைப் பக்தர்கள் சென்று வழிபட ஒருவரும் தடைவிதிக்க முடியாது என்று பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான சுந்தர்சிங் பண்டாரி கூறியுள்ளார்.

இந்துக் கோயிலுக்குச் சென்று வழிபடுபவர்களைத் தடுக்கும் அதிகாரம் உயர்நீதி மன்றத்துக்குக் கிடையாது என்றும் அவர் கூறியுள்ளார். ஆலயப் பிரவேசத்தை மறுத்தால் பாரதீய ஜனதாக்கட்சி சத்தியாக்கிரகப் போராட்டத்தில் குதிக்கும் என்றார் அவர்.

# இந்திய இராணுவத்திற்கு புதியரக துப்பாக்கி

இந்திய இராணுவம் புதிய வகை துப்பாக்கி ஒன்றைதனது பாவனைக்கு எடுத்துள்ளது. எப். 56 எம். எம். ரக றைபிள்களை இந்திய இராணுவத்தின் காலாட்படைகள் பயன்படுத்தும் எனவும், இவை கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கும் மரபு ரீதியான இராணுவ நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படக்கூடியவை எனவும் கூறப்படுகிறது. இந்திய இராணுவத்தின் படைப்பிரிவுகளால் இது வரை பயன் படுத்தப்பட்டுவந்த 7.62 ரக எஸ். எல். ஆர் ரக றைபிள்கள் மற்றும் எல். எம். ஜிக்களுக்குப் பதிலாக இப்புதிய றைபிள்கள் பயன்படுத்தப்படும் என்று மத்தியப் பிரதேசத்தில் இருக்கும் இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பேசிய லெப். ஜெனரல் கிர்மானி தெரிவித்துள்ளார்.

# நாய்க்கு கத்தியால் குத்திய சைக்கிள் திருடர்கள்

(குருநகர்)

வீட்டுக்காவல் நாய்க்கு கத்தியால் குத்திய திருடர் விறாந்தையில் நிறுத்தி இருந்த புதிய 'லுமாலா' சைக்கிளைத் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் யாழ். கடற்கரை வீதி திருச்சிலுவை சுகாதாரசேவை நிலையத்திற்கு அருகாமையிலுள்ள திருக்குடும்பம் தாஸன் என்பவரது வீட்டில் சமீபத்தில் நடைபெற்றது.

கத்திக்குத்துக்கு இலக்கான நாயும் பிற்பாடு இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (21)

# மேஜர் செங்கோலனுக்கு மக்கள் இறுதி அஞ்சலி

(கொடிகாமம்)

சென்ற வியாழக்கிழமை மணலாற்றில் அதிரடி தாக்குதலில் வீரமரணம் அடைந்த முல்லைத்தீவு கோட்ட சிறப்புப் பொறுப்பாளர் மேஜர் செங்கோலன் (பொன்னுத்துரை பாலமுருகேஷ், சங்கத்தார் வயல், இயக்கச்சி) இவரது புகழுடல் நேற்று முன்தினம் சனிக்கிழமை பொது மக்களின் அஞ்சலிக்காக எழுதுமட்டுவாள் சந்தை மைதானத்தில் வைக்கப்பட்டது. இம் மாவீரருக்கு பெருந்திரளான மக்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். பின்பு கொடிகாமம் வட்டப் பொறுப்பாளர் திரு. விமல் தலைமையில் அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது. இதில் மணலாறு மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு, தமிழன்பன், தென்மராட்சி மாணவர் இயக்கப் பொறுப்பாளர் திரு. புரட்சி மற்றும் ஆசிரியர் திரு வரதராசா ஆகியோரின் அஞ்சலியுரையுடன் முடிவுற்று, இராணுவ மரியாதையுடன் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது (86)

# நாய்கள் காவிவரும்குண்டு பேருமக்கள் மத்தியில்பீதி

(லிமா)

பேருவின் தலைநகரத்தில் வசிக்கும் மக்கள் நாய்களைக் கண்டால் அலறி ஓடுகின்றனர். அங்கு நாய்களில் குண்டுகளைக் கட்டி விட்டு அதனை நகரின் மத்தியில் வெடிக்கவைக்கும் செயலில் குழுவொன்று ஈடுபட்டுவருவதே இதற்குக் காரணமாகும்.

குறுகிய காலத்தில் சுமார் 20 நாய்கள்வரை இவ்வாறு குண்டுகள் கட்டி அனுப்பப்பட்டதாகவும் அவை நகரின் மத்தியில்வெடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இக் குண்டு வெடிப்புக்களால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

எனினும் நாய்களைக் கண்டால் மக்கள் மிகுந்த அச்சமுறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அரசாங்க ஓய்வூதியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் காலை 9 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு

ஒட்டுசுட்டான், முள்ளியவளை, விசுவமடு, அளம்பில், புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு நிலையங்களின் பதிவேடுகளே மறைந்துள்ளன. இவ்வங்கி கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக சிறிலங்கா இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் முல்லைத்

# பிறந்த நாள் நினைவலைகள் [28.12.92]

# தொலைத்தொடர்பு துறையில்

# சைவசித்தாந்தம் அறிமுகம் பல்கலையில் பொதுவிரிவுரைகள்

படுத்தப்படக்கூடியவை என வும் கூறப்படுகிறது. இந்திய ஜெனரல் கிர்மானி தெரிவித்துள்ளார்.

## நாய்க்கு கத்தியால் குத்திய சைக்கிள் திருடர்கள்

(குருநகர்)

வீட்டுக்காவல் நாய்க்கு கத்தியால் குத்திய திருடர் விறாந்தையில் நிறுத்தி இருந்த புதிய 'லுமாலா' சைக்கிளைத் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் யாழ். கடற்கரை வீதி திருச்சிலுவை சுகாதாரசேவை நிலையத்திற்கு அருகாமையிலுள்ள திருக்குடும்பம் தாஸன் என்பவரது வீட்டில் சமீபத்தில் நடைபெற்றது.

கத்திக்குத்துக்கு இலக்கான நாயும் பிற்பாடு இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (21)

## மேஜர் செங்கோலனுக்கு மக்கள் இறுதி அஞ்சலி

(கொடிகாமம்)

சென்ற வியாழக்கிழமை மணலாற்றில் அதிரடி தாக்குதலில் வீரமரணம் அடைந்த முல்லைத்தீவு கோட்ட சிறப்புப் பொறுப்பாளர் மேஜர் செங்கோலன் (பொன்னுத்துரை பாலமுருகேஷ், சங்கத்தார் வயல், இயக்கச்சி) இவரது புகழுடல் நேற்று முன்தினம் சனிக்கிழமை பொது மக்களின் அஞ்சலிக்காக எழுதுமட்டுவாள் சந்தை மைதானத்தில் வைக்கப்பட்டது. இம் மாவீரருக்கு பெருந்திரளான மக்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். பின்பு கொடிகாமம் வட்டப் பொறுப்பாளர் திரு. விமல் தலைமையில் அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது. இதில் மணலாறு மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. தமிழன்பன், தென்மராட்சி மாணவர் இயக்கப் பொறுப்பாளர் திரு. புரட்சி மற்றும் ஆசிரியர் திரு வரதராசா ஆகியோரின் அஞ்சலியுரையுடன் முடிவுற்று, இராணுவ மரியாதையுடன் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது' (86)

## நாய்கள் காவிவரும் குண்டு பேருமக்கள் மத்தியில் பீதி

(லிமா)

பேருவின் தலைநகரத்தில் வசிக்கும் மக்கள் நாய்களைக் கண்டால் அலறி ஓடுகின்றனர். அங்கு நாய்களில் குண்டுகளைக் கட்டி விட்டு அதனை நகரின் மத்தியில் வெடிக்கவைக்கும் செயலில் குழுவொன்று ஈடுபட்டுவருவதே இதற்குக் காரணமாகும்.

குறுகிய காலத்தில் சுமார் 20 நாய்கள்வரை இவ்வாறு குண்டுகள் கட்டி அனுப்பப்பட்டதாகவும் அவை நகரின் மத்தியில்வெடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இக் குண்டு வெடிப்புக்களால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

எனினும் நாய்களைக் கண்டால் மக்கள் மிகுந்த அச்சமுறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

...டத்தில் குதிக்கும் என்றார் அவர்.

### பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அரசாங்க ஓய்வூதியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் காலை 9 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### முல்லைத்தீவு


ஒட்டுசுட்டான், முள்ளியவளை, விசுவமடு, அளம்பில், புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு நிலையங்களின் பதிவேடுகளே மறைந்துள்ளன. இவ்வங்கி கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக சிறிலங்கா இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் முல்லைத்தீவில் செயலிழந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இது சம்பந்தமாக முல்லைத்தீவு கமநலசேவை திணைக்கள உதவி ஆணையாளர் திரு. எஸ். சுந்தரன் நடவடிக்கைகளை எடுத்துவருகிறார் (யோ

### அகதிகள்

குறைவாக உள்ளமையினாலேயே குறிக்கப்பட்ட இரண்டு சங்கமும் பொருள்களை வழங்க உள்ளதாகவும், வேறு கோட்ட கூட்டுறவுச் சங்கங்களின் எல்லைப் பரப்பில் இருந்து இடம்பெயர்ந்துபிரஸ்தாப முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கும் பொருள்கள் வழங்க தயாராக இருப்பதாகவும் தீவக கோட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் அறிக்கைதெரிவிக்கின்றது. (22

## பிறந்த நாள் நினைவலைகள் [28.12.92]



### வீரவேங்கை இயல்வாணன் (கஸ்ரோ)

[சோமசுந்தரம் கமலநாதன்]

வாரிவளவு காரைநகர்

நீ பிறந்து ஆண்டுகளோ
மூவாறு ஆச்சுதடா
நீ மறைந்து திங்கள்களோ
மூவிரண்டு ஆச்சுதடா
தீ திரண்டு எம் வயிற்றுத்
திருமகனாய் வந்தவனே
தீ வகத்து மண்ணீன்ற
தியாகப் புலி மகனே
தாய் தமிழால் தத்தெடுத்த
தவப் புதல்வா இயல் வாணா
காய்த்த மரம் கலங்கவில்லை
கனியாகி வித்தானாய்
சேய் உன்னைப் பெற்றதனால்
செருக்குற்றோம் தலை நிமிர்ந்தோம்
தேய்ந்து கமழ் சந்தனமே
திரும்பவும் வா எம் மகனாய்

40, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
[3855]

அப்பா, அம்மா,
அண்ணா, அக்கா,
தம்பி, தங்கை.

## தொலைத்தொடர்பு துறையில் பொலிசாருக்கு பயிற்சி

(கொழும்பு)

சிறிலங்கா பொலிசாருக்கு தொலைத் தொடர்புத் துறையில் பயிற்சிவழங்கப்பட இருக்கிறது.

ஜப்பான், பிரிட்டன்போன்ற நாடுகளில் பொலிசாருக்கு வழங்கப்படுவது போன்ற இப் பயிற்சித்திட்டம் மிக விரைவில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது இத்திட்டத்தின்படி தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பயிற்றுவிக்கப்படும். அத்துடன் மனித உரிமைகளுக்கும் மதிப்பளிப்பதற்கும் பயிற்சிவழங்கப்படும் என்றும் கூறப்படுகிறது:

## கொள்ளை முயற்சி தோல்வி மாணவர் இருவர் கைது

### பத்தேகமவில் சம்பவம்

(கொழும்பு)

பத்தேகம பகுதியில் இருக்கும் குப்பே என்னுமிடத்தில் கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் கொள்ளை நடத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி பொதுமக்களின் ஒத்துழைப்பினால் முறியடிக்கப்பட்டுள்ளது. வியாழனன்று மாலை கைக்குண்டு, றிவோல்வர் என்பவற்றுடன் வந்த கோஷ்டியொன்று கொள்ளையிடுவதற்கு முயற்சித்ததாகவும், கொள்ளையடித்த பணத்துடன் தப்பியோட முற்படுகையில் அவர்கள் துரத்திப் பிடிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. துரத்தப்பட்ட இருவரும் எல்பிட்டிய பகுதியில் இருக்கும் பிரபல கல்லூரி ஒன்றின் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர் இவர்களது வீடுகள் பொலிசாரால்சோதனையிடப்பட்ட போது இராணுவச் சீருடை உட்பட நாற்பது தோட்டாக்கள் கைப்பற்றப் பட்டதாகக் கூறப்படுகிறது.

## பிற்போடப் பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இன்று 28ம் திகதி தொடக்கம் 31ஆம் திகதிவரை நடாத்த திட்டமிடப்பட்டிருந்த ''வலய ஆலோசகர்களுக்கான செயலமர்வும் கருத்தரங்கும்'' மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (பா)

### கூடுதல்

கின்றனர். அத்துடன் இவற்றைச் செய்ய அரசாங்கத்திடம் போதிய பணம் இல்லை.

இதேவேளை சரியான தலைமைப் பீடம் இன்றி உயிர்களை இழக்க இராணுவத்தினர் தயாரில்லை. ஹமில்டனின் தலைமையிலோ சிசிலின் தலைமையிலோ அவர்களின் அதிகாரப் போட்டிகளுக்கு மத்தியில் போரிட்டு மடிய இராணுவத்தினர் தாம் தயாராயில்லை என்கிறார்கள் எனவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 55,000 மாணவர்கள்

கத்திற்கு அனுமதிபெற தகுதி பெற்றுள்ளனர் அதாவது 41 சதவீதமானோர் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். சென்ற வருடம் பரீட்சையில் 35 சதவீதமானோரே சித்தியடைந்திருந்தனர் 26 000 மாணவர்கள் கலைப்பிரிவு பாடங்களில் சித்தியடைந்துள்ளார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

## சைவசித்தாந்தம் அறிமுகம் பல்கலையில் பொதுவிரிவுரைகள்

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் சைவ சித்தாந்தம் ஓர் அறிமுகம் எனும் தலைப்பிலான தொடர் பொது விரிவுரைகள் வரும் ஜனவரி மாதம் 2ஆம் திகதி சனிக்கிழமை முதல் மார்ச் மாதம் 6ஆம் திகதி சனிக்கிழமை வரை பிரதி சனிக்கிழமை தோறும் காலை 9 மணி முதல் 12 மணிவரை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளன.

சைவசித்தாந்தம் பற்றிய புரிதலையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இவ் விரிவுரைத் தொடரில் சைவசித்தாந்தம் பற்றிப் பல்வேறு தலைப்புகளின்கீழ் இருபதிற்கு மேற்பட்ட விரிவுரைகள் இடம் பெறவுள்ளன.

பல்கலைக்கழக ஆய்வாளர்களும், சைவசித்தாந்த அறிஞர் பெருமக்களும் விரிவுரைகளை ஆற்றவுள்ளனர். சைவ சித்தாந்தம் பற்றி அறிய ஆர்வமுள்ள பொதுமக்களும், மாணவர்களும் இதில் பங்கு பற்றுனர்களாகவும் பார்வையாளர்களாகவும் கலந்து கொள்ளலாம், பங்குபற்றுனர்களே கலந்துரையாடல்களில் கலந்து கொள்ளலாம்.

பங்குபற்றுனர்களாக கலந்து கொள்ள விரும்புவோர் தங்கள் பெயர்களை டிசம்பர் 30 ஆம் திகதிக்கு முன்பதாக புறநிலைப் படிப்புகள் அலகில் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும் என புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவிக்கிறார்.

### தமிழ்

களின் நடவடிக்கையை கண்டி, மாத்தளை, நாவலப்பிட்டிய பகுதிகளில் விரிவுபடுத்தக் கண்டிக்கு வந்ததாக அவ்வட்டாரங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன

இதேவேளை இவ்வாரம் கொழும்பில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த பத்துக்குமேற்பட்ட இளைஞர் யுவதிகள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸ் தலைமை அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### சம்பள உயர்வு

இதேவேளை பல்கலைக்கழகங்களின் அனுமதி தொடர்பான விடயங்களைக் கவனிப்பதற்காக விசேட அலவன்சாக அடிப்படைச் சம்பளத்தில் 25 சதவீதத்தை வழங்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முன்வந்துள்ளது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 27.12.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7287

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;

41-9530, 24-6439, 22-9005, 26-6264, 28-4381,
24-4153, 41-9211, 42-2151, 28-9249, 24-4323,
24-8429, 42-1325, 26-9495, 24-8391, 24-1259,
24-9596, 27-1141, 27-9136, 24-6663, 24-8484,
24-6431, 24-7225, 42 3239, 26-5870, 24-5258,
24-9938, 28-1677, 42-3329, 26-2297, 27-6887,
27-9052, 28-6748, 24-521, 28-799, 26-8382,
28-2979, 24-9490, 28-1185, 27-5907, 27-5058,
28-1862, 28-1928, 26-8878, 24-8212, 26-7546,
24 5529, 24-0192, 26-1253, 24-0528, 26-3628,
24-4664

வட பகுதிக்கு வெளியேசென்ற வாகன இலக்கங்கள்:

41-6933, 28-8051, 41-9989, 42-7312, 40-1516,
26-0535, 24 4476, 26-3177, 27-7653, 27-1531,
22-7271, 28-2385, 26-6568, 24-6378, 22-6666,
22-8835, 27-0849, 24-9856, 26-5244, 26-3633,
27-1292, 28-0427, 26-7264, 27-9764

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.